**செய்தி வெளியீடு எண்: 561** **நாள்: 20.08.2018**

## தமிழ் வளர்ச்சித் துறை

## திரு.வி. கலியாணசுந்தரனார் சிலைக்கு மாலை அணிவித்துச் சிறப்புச் செய்தல் 26.08.2018

தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் (திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார்) அவர்கள் தற்போதுள்ள சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம், துண்டலம் கிராமத்தில் **26.08.1883** அன்று பிறந்தார். இவர் சென்னையில் இராயப்பேட்டையில் வெசுலிப் பள்ளியில் ஆறாம் வகுப்பு வரை படித்தார். வெசுலி பள்ளியில் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணம் நா.கதிரவேற்பிள்ளை மற்றும் மயிலை தணிகாசல முதலியாரிடம் தமிழ்க்கல்வி கற்றார். பின்னர் வெசுலியன் பள்ளியில் ஆசிரியராகவும், வெசுலி கல்லூரியில் தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

திரு.வி.கலியாணசுந்தரனார் அவர்கள் சிறந்த மேடைப் பேச்சாளர். இவர், மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, உள்ளொளி, உரை நூல்கள், பெரிய புராணம் குறிப்புரையும் – வசனமும், முருகன் அல்லது அழகு, இலங்கைச் செலவு (பயணநூல்) போன்ற அரசியல், சமுதாயம், சமயம் சார்ந்த பல நூல்களையும், பாடல்களையும் எழுதியுள்ளார். இவரது படைப்பிலக்கியங்களில் இவரால் கையாளப்பட்ட தமிழ்நடையின் காரணமாக இவர் ‘தமிழ்த்தென்றல்’ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். இவர் தேசபக்தன், திராவிடன், நவசக்தி போன்ற நாளிதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றி நாட்டு விடுதலைக்குத் தொண்டாற்றியவர். தமிழ்நாட்டில் தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த ‘தமிழ்த்தென்றல்’ திரு.வி. கலியாணசுந்தரனார் அவர்களின் புகழைப் போற்றும் வகையில் சென்னை மாநகராட்சி

எல்லைக்குட்பட்ட மதுரவாயல் வட்டத்தில் அவர் பிறந்த ஊரான துண்டலம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு அவருடைய பிறந்த நாளான ஆகத்து 26ஆம் நாளன்று ஆண்டுதோறும் மாலை அணிவித்து மலர்தூவி சிறப்பு செய்யப்படும் என மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் தமிழ் வளர்ச்சித் துறைக்கான 2018–2019ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பெற்றது.

அவ்வறிவிப்பிற்கிணங்க, சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மதுரவாயல் வட்டத்தில் அவர் பிறந்த ஊரான துண்டலத்தில் 'தமிழ்த்தென்றல்' திரு.வி. கலியாணசுந்தரனார் சிலைக்கு 26.08.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் வளர்ச்சித் துறையால் மாலை அணிவித்து, அவர்தம் திருவுருவப் படத்திற்கு மலர்தூவிச் சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழறிஞர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**